**வாக்குமூலம்**
**நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**இராணிப்பேட்டை.**
**வழக்கு எண். SC 69/2020**
**வழக்கு சாட்சி PW 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமேஷ்குமார் | ஜாதி | : | கருணீகர் |
| தந்தை பெயர் | : | சிவஜோதி | தொழில் | : | முதுநிலை வருவாய் ஆய்வாளர் |
| கிராமம் | : | லாலாப்பேட்டை | சமயம் | : | இந்து |
| தாலுக்கா | : | வாலாஜா | வயது | : | 49 |

**(எதிரி ஆஜர்)**
**தேதி 08.11.2023**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நில சீர்திருத்த அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 2019ம் வருடம் அனந்தலை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது ஆஜர் எதிரி செல்வம் அவருடைய மனைவி தனலட்சுமியை அடித்து கீழே தள்ளிவிட்டதில் இறந்துவிட்டதாக எதிரியின் வீடு அமைந்துள்ள அனந்தலை கிராமம் பைரா காலனியில் வைத்து காவல் ஆய்வாளரிடம் வாக்குமூலம் கொடுத்தார். ஆஜர் எதிரி மனைவியை எப்படி கொலை செய்தார் என்று நடித்து காண்பித்தார். எதிரி அவருடைய வீட்டில் இருந்து செங்கல், பீரோவின் கைப்பிடி மற்றும் அண்டா ஆகியவற்றை எடுத்து ஆஜர்படுத்தினார். அதனை போலீசார் பதிவு செய்தார்கள். அதில் நானும் என்னுடைய உதவியாளரும் கையொப்பம் செய்தோம். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்டுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.4 ஆகும். போலீசார் சான்றுபொருட்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் என்னுடைய உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.5** ஆகும். அண்டா **சா.பொ.2** செங்கல் **சா.பொ.3** மற்றும் பீரோவின் கைப்பிடி **சா.பொ.4** ஆகும். காவல்

ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை சம்பவ இடத்திற்கு காலை 8.30 மணிக்கு காவல் ஆய்வாளர் அழைத்தார். நான் போலீசார் வாக்குமூலம் பதிவு செய்ததாக சொல்லும் தேதியில் அனந்தலை கிராமத்தில் வசித்து வந்தேன். நான் அனந்தலை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக 2017 முதல் 2020 வரை பணிபுரிந்தேன். என் ஆளுகைக்குட்பட்ட கிராமத்தில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் நான் நேரில் சென்று பார்த்து என்னுடைய உயர் அதிகாரிகளுக்கு தகவல் சொல்வேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் சம்பவம் குறித்து எனக்கு 18ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் தெரியும். நான் அன்றைய தினமே மதியம் 12.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு போய்விட்டேன். நான் வழக்கு சம்பவம் குறித்து எங்கள் துறையை சேர்ந்த வட்டாட்சியருக்கு எழுத்து பூர்வமான தகவல் கொடுத்தேன். தகவல் கொடுத்ததும் எனக்கு தொலைபேசி வாயிலாக உத்தரவு கொடுத்தார். ஆனால் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் சம்பவ இடத்திற்கு வரவில்லை. கோட்டாட்சியர் விசாரணைக்கு போட்ட போது நான் இருந்தேன். கோட்டாட்சியார் பிரேத விசாரணையை வாலாஜா அரசு மருத்துவமனையில் வைத்து நடத்தினார். என்னை கிராம நிர்வாக அலுவலர் என்ற முறையில் கோட்டாட்சியர் என்னை விசாரிக்கவில்லை. கோட்டாட்சியர் விசாரணை முடித்து எந்த தவறும் இல்லை என்று சொல்லி பிணக்கூராய்வு செய்வதற்கு அனுமதி கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி மரணம் கு வி முச பிரிவு 174 படி உள்ள மரணம் என்பதால் சட்ட ஒழுங்கை பராமரிப்பதற்காக சம்பவம் நடந்த கிராமத்தில் இருந்தேன். அங்கு எதிரி இருந்து கொள்ளி போட்டார். அப்போது போலீசாரும் அங்கு இருந்தார்கள். நான் காலை 11.00 மணிக்கு சம்பவ வீட்டிற்கு சென்றபோது அங்கு காவல் ஆய்வாளர் மற்றும் தலைமை காவலர் ஆகியோர் இருந்தனர். அப்போது போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சம்பவ இடத்திற்கு 22.09.2019ம் தேதி செல்வதற்கு என்னுடைய உயர் அதிகாரி வாய்மொழியாக அனுமதி கொடுத்திருந்தார். எதிரி

கொடுத்த வாக்குமூலத்தை ராஜேஸ்வரி காவல் நிலையத்தில் வைத்து தட்டச்சு செய்தார். அங்கு வைத்து தட்டச்சு செய்து பிரிண்ட் அவுட் எடுத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். எதிரி அவருடைய மனைவியை கொலை செய்ததை நடித்து காட்டினார் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை போலீசார் 21.09.2019 ம் தேதி இரவு 10.30 மணிக்கு காவல் நிலையத்தில் அடைத்து வைத்திருந்தார்கள் என்றும் நான் 22.09.2019 ம் தேதி காலை காவல் நிலையம் சென்றபோது போலீசார் தட்டச்சு செய்து தயார் செய்து வைத்திருந்த எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. எதிரி என் முன்னிலையில் வைத்து தான் வாக்குமூலம் கொடுத்தார். நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மேலதிகாரிகள் மற்றும் போலீசார் சேர்ந்து தயார் செய்த ஆவணத்தில் என்னை கையொபபம் போடச்சொன்னதின் பேரில் நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் நான் போலீசாருக்கு பவ்வியப்பட்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என் முன்னிலையில் சான்றுபொருட்களை ஆஜர்படுத்தவில்லை என்றும் அந்த மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH